**அம்பலாந்தோட்டை பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 07 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 841,200 தொகை பெறுமதியான 08 கட்டிடங்கள் கடந்த ஆண்டுகளின் போது அகற்றப்பட்டு அல்லது உடைந்து வீழ்ந்து இருந்த போதிலும், அவற்றை கணக்குகளில் இருந்து அகற்றி இருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | சபைக்கு சொந்தமான லுணம தகன கூடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 2,200,000 தொகைக்காக L.P வாயு அலகினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக் களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மீதி ரூபா 2,458,674 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,000,000 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 5,729,328 தொகைக்கான மீதிகள், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 709,768 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமமின்மைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் கூட்டுத்தொகை ரூபா 163,142,897 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சபைக்கு உரித்தாக்குவதற்கும், காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்பிப்பதற்கும் 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின் அட்டவணைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 185 | சபையின் பொதுக் கணக்கு மற்றும் நிர்மாண வேலைக் கணக்கு கணக்குகளில் காணப்பட்ட சராசரி மிகைப் பணம் மீதி முறையே ரூபா 5,226,443 தொகை மற்றும் ரூபா 7,011,233 தொகை எனினும், அதில் ஒரு பகுதியை ஏனும் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வெளி நிறுவனங்களில் இருந்து அபிவிருத்தி விடயங்களுக்கு வழங்கப்பட்ட பணம் இந்த கணக்கிற்கு செலவு வைத்தல் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணப் பெறுவனவுகள் இதனை தாக்கியுள்ளதுடன் 2019 ஏப்ரல் 30 திகதியில் உள்ளவாறு அபிவிருத்தி கணக்கில் மீதி ரூபா 1,859,000 தொகை ஆகும். |
| (ii) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்கு களுடன் சமர்ப்பிப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/1 இலக்கங் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | 101 கடைகளின் வாடகை உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 27 கடைகளின் உடன்படி க்கைகள் நாளது வரை ஆக்கப்பட்டிருந்ததுடன் மீதியான 74 கடைகளை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,329,171 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,693,491 தொகை காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,910,100 | 4,632,546 | 3,409,957 | 4,008,274 | 5,271,600 | 4,882,392 | 6,072,916 | 4,022,321 |
| வாடகை | 16,723,700 | 15,764,400 | 15,207,683 | 3,455,208 | 17,075,700 | 15,775,010 | 17,825,633 | 3,179,316 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,531,300 | 2,608,934 | 2,476,934 | 233,280 | 1,592,000 | 1,669,597 | 1,381,067 | 529,680 |
| ஏனைய வரு மானங்கள் | 86,315,300 | 82,248,941 | 67,152,044 | 26,806,049 | 127,046,500 | 105,484,322 | 57,025,583 | 55,780,549 |
| மொத்தம் | 110,480,400 | 105,254,821 | 88,246,618 | 34,502,811 | 150,985,800 | 127,811,321 | 82,305,199 | 63,511,866 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 168,766,687 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 88,246,618 தொகை ஆக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 52 சதவீதம் ஆகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை தொகை ரூபா 34,502,811 தொகை ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் அறவீடு கள் 52 சதவீதம் ஆவதற்கான காரணம் மாகாண சபையில் இருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் உரிய முறையில் கிடைக்காமை மற்றும் இயந்திர வாடகை நிலுவையினை அறவீடு செய்வதற்கு முடியாமல் போதல். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த ரூபா 3,886,424 தொகைக்கான வீதவரி மீதியில் ரூபா 5,000 தொகையினை விட மிகையான 68 வீதவரி அலகுகளில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,212,869 தொகை காணப்பட்டமையால் வீதவரி அறவீடு செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் 2019 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 758,413 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 50 கடைகளில் இருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 175,140 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் 2019 மே 15 திகதியில் உள்ள ரூபா 90,610 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய இயந்திர உபகரணங்கள் வாடகை வருமானம் ரூபா 1,842,904 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் அம் மீதியை 2 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 1,470,549 தொகை இருந்தது. | நிலுவை இயந்திர உபகரண வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 197,435 தொகை அறவீடு செய்திருந்ததுடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 17,850 தொகையாகக் காணப்பட்டதுடன், அந்த மீதியின் நிலுவையாக இருந்த காலவீச்சு 2009 ஆண்டிற்கும் 2014 ஆண்டிற்கும் இடைப்பட்டதாகும். | நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2009-2014 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவை ஒன்று எனவும், அவற்றை உறுதிப்படுத்தும் போது அந்த வர்த்தக நிறுவனங்களைக் மூடப்பட்டுள்ளமையால் நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 49 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 121,850 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வியாபார வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 51,600 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மீதியை பதிவளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.6 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 அறிவித்தல் பலகைகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 215,430 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அறிவித்தல் பலகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை அறிவித்தல் பலகை கட்டணங்களில் ரூபா 132,000 தொகை அறவிடப்பட்டதுடன் மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 10,190,173 தொகை மற்றும் ரூபா 10,092,835 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2019 மார்ச் 14 திகதி ரூபா 10,000,000 தொகை அறவிடப்பட்டதுடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 திகதி வரை 07 விடயத்திற்கு மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தது. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணை விதி ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அறவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக்காக நீண்ட காலத் திட்டங்கள் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடங்களுக்கு ஒரு முறை வீதவரி ஆதனங்கள் பெறமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும் சபையினால் 2011 ஆண்டிற்கான வீதவரி பெறுமதி மதிப்பீட்டு அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | வீதவரி ஆதனங்கள் விரைவாக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி ஆதனங்களுக்காக வீதவரி திருத்தம் ஒன்று செய்து தருமாறு 2018 மே 21, 2018 ஆகஸ்ட் 20, 2019 பெப்ரவரி 25 திகதி கடிதங்களின் மூலம் மாவட்ட பெறுமதி மதிப்பீட்டு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. |

### 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள தொலை தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. | கணிப்பீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்துதல் கோபுரங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்கிறேன். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஏப்ரல் 10 திகதி 02 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. மீதியான வெற்றிடங்கள் தொடர்பாக ஆணையாளரை அறிவுறுத்தியுள்ளேன். அத்துடன் ஆளுனர் அங்கீகாரம் கிடைத்துள்ள 03 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு எதிர்காலத்தில் மேற்கொள்வேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 09 வாகனங்களின், சபைக்கு சொந்தமான 12 காணிகளின் மற்றும் 5 கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையை 2018 திசெம்பர் 31 திகதி வரை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்களை உரித்தாக்கல் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் வினவியுள்ளேன். 09 வாகனங்களின் உரிமை எதிர்காலத்தில் உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 வருடாந்த பண்டக் கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் 2017 பண்டக் கணிப்பீட்டில் கண்டறியப்பட்ட 07 பண்டங்களின் குறைவு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறைவு தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 01 நீர்த் தொட்டி களுவாவில பொது கழிப்பறையில் உக்கியிருந்ததுடன் அடுத்த நீர் தொட்டி மற்றும் 05 கனபி கண்டுபிடிக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 3.6 பெறுகை

### 3.6.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாண வேலைக்காக சாத்தியக் கூறு அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க வேண்டும். | 2019 வருடம் முதல் நிர்மாண வேலைக்காக சாத்தியக் கூறு அறிக்கை தயாரிப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்ட ஹுங்கம உப அலுவலகக் கட்டிடத் திருத்த வேலை மற்றும் உஹறபிடகொட குப்பை முகாமைத்துவ வேலைத் தளத்தில் களஞ்சியம் ஒன்று அமைக்கும் 2 நிர்மாண வேலைகள் தொடர்பாக நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 18,896 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றப் படாத வேலைக்காக கொடுப்பனவு செய்யக் கூடாது | குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் படி அறிவித்துள்ளேன். குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாவிடின் தடுத்து வைத்தல் பணத்தில் இருந்து மிகையாக செலுத்திய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடயம் ஒன்றில் பாதீட்டு எல்லையை மிகைத்து ரூபா 5,633,190 தொகை அதாவது 61 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | செலவு விடயம் ஒன்றில் சேமிப்பு ரூபா 619,591 தொகையாக இருந்ததுடன் அவை 49 சதவீதமாகும். | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |